Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 337

வியாழக்கிழமை
30 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



பிணை விண்ணப்பத்துக்காக

## ரணில் தரப்பினரால் வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையில் மோசடி!

- நீதிமன்றில் நேற்றுக் கடும்வாதம்
- மீளாய்வில் மருத்துவ அறிக்கை

**கொழும்பு, ஒக்ரோபர் 30**

**பிணை கோருவதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட மருத்துவ அறிக்கையில் மோசடிகள் உள்ளன என்ற சந்தேகம் நீதிமன்றத்தில் நேற்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து, அந்த மருத்துவ அறிக்கையை மீளாய்வு செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

11

## வடக்கு மாகாணசபையை திசைகாட்டியே கைப்பற்றும்

*பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 30
வடக்கு மாகாணசபை உட்பட நாட்டின் அனைத்து மாகாணசபைகளையும் தேசிய மக்கள் சக்தியே கைப்பற்றும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு

11

அரச சேவையில்

## 8,547 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி!

» 03

யாழ்.நகர்ப் பகுதியில்

## போதைப்பொருள்களுடன் நடமாடிய நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 30
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் போதைப்பொருள்களுடன் நடமாடிய நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

11

## நாளைமறுதினம் முதல் வெடிகொளுத்தத் தடை

பருத்தித்துறை நகரசபை அதிரடி முடிவு

யாழ்ப்பாணம், ஒக். 30
பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பொதுஇடங்களில் நாளைமறுதினம் முதல் வெடி கொளுத்துவதற்குத்

11

## யாழ்.மாவட்டப் போக்குவரத்து; எம்.பி.க்கள் நேரில் ஆராய்வு!

***இணைந்த அட்டவணை தொடர்பில் கூடுதல் கவனம்***

யாழ்ப்பாணம், ஒக். 30
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துச் சேவைகளின் குறைபாடுகள் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் நேற்று நேரடிக் களப்பயணம் மேற்கொண்டு

11



காற்றின் வேகம் உச்சம்!
## மீனவர்களே அவதானம்

» 05

நல்லூர்ப் பிரதேசசபைப் பகுதிகளில்

## கழிவுகளை வீசுவோர் மீது பாய்கின்றது நடவடிக்கை!

*11 இடங்களில் தொடர் கண்காணிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 30
நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் கழிவுகளைக் கொட்டுபவர்கள் மீது பாரபட்சம் இன்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நல்லூர் பிரதேசசபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார். தொடர்ச்சியாகக் கழிவுகள் கொட்டப்பட்டு

11

எம்.பி.க்களின் பாதுகாப்பு

## பொலிஸ்மா அதிபர் பிரியந்தவை நாடாளுமன்றத்துக்கு அழைக்குக

*எதிரணிகள் கூட்டுக் கோரிக்கை*

கொழும்பு, ஒக். 30
நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவை நாடாளுமன்றத்துக்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன. சபாநாயகர் தற்போது வெளிநாட்டுக்குப்

11



**முச்சந்தி முரளி**

**" எல்லாத்திலையும் நரித்தனம் செய்தவர் கடைசியில இதிலையும் அதை செய்திட்டார் போல"**



கிளிநொச்சி – பரந்தனில்

## இராணுவப் பிடியிலிருந்த தனியார் காணி விடுவிப்பு

கிளிநொச்சி, ஒக். 30
கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பரந்தன் பகுதியில், இராணுவத்தின் வச

11

## மூக்கால் குருதி வடிந்து பச்சிளம் குழந்தை சாவு!

*நல்லிணக்கபுரத்தில் சோகம்*

யாழ்ப்பாணம், ஒக். 30
யாழ்ப்பாணம் - கீரிமலை- நல்லிணக்கபுரம் பகுதியில், மூன்று மாதக் குழந்தையொன்று திடீர் சுகவீனமுற்று மூக்காலும், வாயாலும்

11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 29.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4239 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 15 44 76 77 |
| விசேட எழுத்து | Y |

| ஹந்தஹஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 29.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1306 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 21 23 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 29.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0265 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 5 0 2 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 29.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2345 |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 26 36 46 63 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 29.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5997 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 0 9 5 3 4 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 29.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2027 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 04 10 71 72 |
| விசேட எழுத்து | Z |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 29.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0113 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 18 38 |

# 2 இலட்சத்துக்கும் அதிக மாணவர்கள் கொழும்பில் போதைக்கு அடிமை!

## சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.30**

**பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 2 இலட்சத்து 30 ஆயிரத்து 982 மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையானவர்கள் இளைஞர்களே. அவர்களில் அதிகமானவர்கள் குறைவான எழுத்தறிவு மட்டத்தில் காணப்படுகின்றனர். போதைப் பொருள் பாவனை மற்றும் பாதாளக்குழுக்களுடன் தொடர்புபட்ட குற்றங்களுக்காகவே அதிகளவானோர் சிறையில் உள்ளார்கள். தாய்மார்கள் செய்த தவறுகளால் 5 வயதுக்குக் குறைவான 42 குழந்தைகள் சிறையில் உள்ளனர். வழக்குகளை விசாரித்து 10 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது என்று வைத்துக்கொள்வோம். 5 ஆண்டுகள் வரை தாயும், குழந்தையும் ஒன்றாக இருக்க அனுமதிக்கிறோம். 5 வயது பூர்த்தியாகும் நாளில் குழந்தையையும் தாயையும் பிரித்து வைக்கின்றோம். பாதாளக்குழுக்களின் செயற்பாடுகளில் தென்மாகாணம் முன்னிலையில் உள்ளது. போதைப்பொருள் மற்றும் பாதாளக்குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஒட்டுமொத்த மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 29.10.2025 | புதன்கிழமை | 0705 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| A | 9 3 9 1 2 4 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 29.10.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2971 | F | 31 34 41 68 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 29.10.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| O | 36 47 57 59 | 5132 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 29.10.2025 | புதன்கிழமை | |
| கும்பம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 08 13 27 37 | 4683 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 29.10.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| E | 03 | 20 26 42 59 | 2147 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 29.10.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 35 45 63 70 | 2797 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 29.10.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 15 30 54 55 | 2174 |

# பீதியில் உருவாகியதே எதிரணிகள் கூட்டணி

***சவால் இல்லை என்கிறது அரசாங்கம்***

கொழும்பு, ஒக்.30

எதிரணிக் கூட்டணியால் அரசாங்கத்துக்கு எவ்வித சவாலும் இல்லை, மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அஞ்சவில்லை எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, வழக்குத் தொடுக்கப்பட்டுவருகின்றது. அதேபோல அரசியல்வாதிகளின் சொத்துக்குவிப்புப் பற்றியும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் சில எதிரணி உறுப்பினர்கள் பீதியடைந்துள்ளனர்.

ஒன்றுசேர்வதற்குரிய உரிமை உள்ளது. அதன் அடிப்படையில் அவர்கள் ஒன்றுகூடலாம். கருத்து வெளியிடும் சுதந்திரமும் உள்ளது. அந்தச் சுதந்திரத்தையும் பயன்படுத்தலாம் - என்றார். (எ-44)

# பொலிஸ்மா அதிபரின் செயற்பாடு அரசியல்மயமாக மாறிவிட்டது!

## சாடுகின்றார் சஜித்

கொழும்பு, ஒக்.30

நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தொடர்பில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ள கருத்துகள் முற்றுமுழுதாக அவரது சிறப்புரிமைகளை மீறுபவையாக உள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டிஉள்ளார்.

அவர் விடுத்துள்ள சிறப்பு அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதில் உள்ளதாவது

பொலிஸ்மா அதிபரின் அறிவிப்பு மூலம் ஒரு பிரஜை என்ற ரீதியில் ஜகத் விதானவின் சிறப்புரிமைகளும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் அவரது சிறப்புரிமைகளும் மீறப்பட்டுள்ளன. பொலிஸ்மா அதிபரின் சில நடவடிக்கைகள் அரசியல்மயமானவையாகவே காணப்படுகின்றன. சில விசாரணைகள் அரசியல் மற்றும் ஊடகக் காட்சிப்படுத்தல்களாக மாற்றப்பட்டுள்ளன.

உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள ஜகத் விதான, அவை தொடர்பாக முறைப்பாட்டாளராகச் செயற்படும்போது அவரைக் குற்றவாளியாக அழைப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஜகத் விதான சிறந்த மக்கள் சேவைகளை ஆற்றி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராவார். அவரது பாதுகாப்புத் தொடர்பில் அவதானம் செலுத்துவது நாட்டின் பாதுகாப்புத் தரப்புகளினது பொறுப்பாகும்- என்றுள்ளது. (எ-இ)



# அரசமைப்பை மீறவில்லை

## அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.30

அரசமைப்பின் பிரகாரமே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாக்க செயற்பட்டுவருகின்றார். இதனால்தான் அரசமைப்பு மீறல் தொடர்பில் அவருக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டுக்கூட இல்லை என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்சவும், அவரது குடும்பத்தாரும்தான் ஹிட்லர் போலச் செயற்பட்டனர். ஜனநாயகத்துக்கு சமாதி கட்டி சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதற்கு 18ஆவது திருத்தச்சட்ட மூலம் கொண்டுவரப்பட்டது.

எமது ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரமே செயற்படுகின்றார்.

நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் சமம். இந்தக் கோட்பாட்டை நாம் மீறப்போவதில்லை எனவும் சுனில் வட்டகல குறிப்பிட்டார். (ச-44)

# மேல் நீதிமன்றங்களாக மாறிய அரசியல்வாதிகளின் வீடுகள்

கொழும்பு,ஒக்.30

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்ட கொழும்பில் உள்ள நான்கு உத்தியோகபூர்வ இல்லங்களில் நான்கு மேல் நீதிமன்றங்களை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம பயன்படுத்திய கிரகெரி வீதி, கொழும்பு 7 என்ற முகவரியில் உள்ள இல்லம், மறைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயன்படுத்திய பௌத்லோக மாவத்தையில் உள்ள இல்லம், முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல பயன்படுத்திய விஜேராம மாவத்தையில் உள்ள இல்லம் மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மறைந்த இரா.சம்பந்தன் பயன்படுத்திய ஸ்டான்மோர் சந்திரவங்கய வீதியில் உள்ள இல்லம் ஆகிய நான்கு உத்தியோகபூர்வ இல்லங்களும் மேல் நீதிமன்றங்களாக மாற்றப்படவுள்ளன.

இந்த நடவடிக்கை நீதிமன்றங்களுக்கான இடவசதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8,547 வெற்றிடங்களுக்கு அரச சேவையில் ஆட்சேர்ப்பு

## அனுமதித்தது அமைச்சரவை

**கொழும்பு, ஒக்.30**

**அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணிக் குழாம் முகாமைத்துவத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் 22 துறைகளில் சுமார் 8 ஆயிரத்து 547 ஆட்சேர்ப்புகளை மேற் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

அரசசேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்து தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் நேரச் சட்டகத்தை அடையாளங்கண்டு, அதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளரின் தலைமையில் உத்தியோகத்தர் குழுவொன்றை நியமிப்பதற்காக கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அந்தக் குழுவுக்கு அமைச்சுகளிலும், அமைச்சுகளின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிலும் நிலவுகின்ற பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு, கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் விதந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அந்த விதந்துரைகளுக்கு அமைய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த ஆட்சேர்ப்புகளில் வடக்கு மாகாணசபையில் 115 ஆட்சேர்ப்புகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

## மர்ம திரவத்தை அருந்திய மீனவர்கள் இருவர் சாவு!

புத்தளம், ஒக்.30

நுரைச்சோலைப் பகுதியில் கடலில் மிதந்துவந்த போத்தல் ஒன்றில் இருந்த திரவத்தைப் பருகிய இரு கடற்றொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் புத்தளம் ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இருவரும் 28 வயதுடையவர்களாவர். நுரைச்சோலை பகுதியில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நான்கு கடற்றொழிலாளர்கள், கடலில் மிதந்துவந்த மர்மமான திரவம் நிரப்பப்பட்ட போத்தல் ஒன்றைக் கண்டெடுத்து அதனை அருந்தியுள்ளனர்.

அதனைப் பருகியதைத் தொடர்ந்து, அவர்கள் கடும் சுகவீனமடைந்தநிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## ஜப்பானியக் கப்பல் இலங்கை வருகை

கொழும்பு, ஒக்.30

ஜப்பானியக் கடற்படையின் அகிபோனோ என்ற போர்க்கப்பல், நேற்றுமுன்தினம் நல்லெண்ணப் பயணமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தப் போர்க்கப்பல், கொழும்புக் கடலில் இலங்கைக் கடற்படைக் கப்பலுடன் ஒரு பயணப் பயிற்சியை நடத்திய பின்னர், நாளை 31ஆம் திகதி நாட்டைவிட்டுப் புறப்படவுள்ளது. (ச-இ)

## செவ்வந்திக்குச் சட்டப்புத்தகம் வழங்கிய சட்டத்தரணி கைது

கொழும்பு, ஒக்.30

கணேமுல்ல சஞ்சீவ படுகொலைக் குற்றச்சாட்டில் நேபாளத்தில் கைதான இஷாரா செவ்வந்தி வழங்கிவரும் வாக்குமூலத்தின் பிரகாரம் தொடர்ச்சியாக பலர் கைதுசெய்யப்பட்டு வரும் நிலையில் பெண் சட்டத்தரணி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கைத்துப்பாக்கியைச் சட்டக்கோவை நூல் ஒன்றில் மறைத்துக்கொண்டு, செவ்வந்தி நீதிமன்றம்வருவதற்கு உதவிசெய்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த பெண் சட்டத்தரணியை 72 மணி நேரம் தடுத்துவைத்து விசாரிக்க குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## போதைமாத்திரைகளுடன் 7 சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம்,ஒக்.30

காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவினரால் போதை மாத்திரைகளுடன் 7 சந்தேக நபர்கள் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப் பட்டுள்ளனர். காங்கேசன்துறை பிராந்திய மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கேற்ப அச்சுவேலி ஆவரங்கால் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்தக் கைது இடம் பெற்றது.

இதன்போது 306 போதை மாத்திரைகள் சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப் பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவருக்கு ஏற்கனவே சில நிலுவை வழக்குகள் உள்ளன. சந்தேகநபர்கள் அனைவரும் மேலதிக சட்டநடவடிக்கைக்காக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத் தப்பட்டுள்ளனர். (ச-23)






## தங்கப்பெண்ணே.. சிங்கப்பெண்ணே!

எப்பவுமே குப்பையளைத் தூக்கிக் கோபுரத்திலவைச்சுக் கொண்டாடுறதும், கப்புகள், மெடல்களோட வாறவையைக் குப்பை மாதிரி கேவலப்படுத்திறதும் தான் எங்கட பிறவிக்குணம். ஆரும் சாதனையள் செய்திட்டால், அவையை வாழ்த்திறவையைவிடவும் குறையள் சொல்லி, எப்பிடி அவையை முன்னேறவிடாமல் தடுக்கலாம் எண்டு தங்கட வயித்தெரிச்சலைப் போக்காட்ட நினைக்கிறவைதான் இஞ்ச பெரும்பான்மையா இருக்கினம். அதாலதான் குப்பையளைத் தலையில தூக்கிவைச்சுக் கூத்தாடுகினம்.

கொஞ்சநாளைக்கு முதல் செவ்வந்தியைப் பற்றித்தான் இந்த நாடுமுழுக்கக் கதை. இத்தனைக்கும் செவ்வந்தி ஏதோ நாட்டுக்காக பெரிய தியாகமோ, சாதனையோ செய்யேலை. நீதிமன்றத்துக்குள்ள புத்தகமொண்டுக்க துவக்கை ஒளிச்சுக்கொண்டுபோனது தான் செவ்வந்தி செய்த வேலை. அந்தத் துவக்கை வைச்சு கணேமுல்ல சஞ்சீவ எண்ட பாதாளக்கும்பலின்ர தலைவரைக் கொலை செய்தவை. அந்தக் கொலையின்ர பங்காளி செவ்வந்திதான். கொலை நடந்த பிறகு இஞ்சையிருந்து தப்பியோடி நேபாளத்தில ஒளிச்சிருந்த செவ்வந்தி எண்ட கொலைகாரியைப் பிடிச்சு நாட்டுக்கு கொண்டரேக்க, எங்கட ரீவியளும், ரேடியோக்களும், யூரியூப்புகளும் "செவ்வந்தி பிளைட் ஏறிட்டா" "செவ்வந்தி சீற்றில இருந்திட்டா" "செவ்வந்தி ஏறின பிளேன் பறக்கத் தொடங்கிட்டு" எண்டு அவாவை கட்டுநாயக்கவுக்குக் கொண்டுவரும் வரைக்கும் 'லைவ்' மாதிரி 'பிரேக்கிங் நியூஸா' சொல்லிக் கொண்டிருந்தவை. செவ்வந்தி கட்டுநாயக்கவில இறங்கினதும் எல்லா மீடியாக்காரரும் அவாவைச் சுத்தி வளைச்சிட்டினம். பிறகு கஷ்டப்பட்டுத்தான் அவாவை அங்கையிருந்து மீட்டெடுத்து ஜெயிலில கொண்டந்து அடைச்சவை. அந்தளவுக்கு செவ்வந்தியைச்சுத்தி ஒரே மீடியா வெளிச்சம்தான். அதைமாதிரி பேஸ்புக் கிலையும் ஒரே செவ்வந்தி புராணம் தான்.

இப்பிடிக் கொலைகாரச் செவ்வந்தியை வளைச்சு வளைச்சு வீடியோ எடுத்த மீடியாக்காரர், பாத்திமா ஷபியா யாமிக் கட்டுநாயக்க எயார்போட்டில வந்திறங்கினதைக் கண்டுகொள்ளவே இல்லை. சில வேளை இதை வாசிக்கிற உங்களுக்குக் கூட பாத்திமா ஷபியா யாமிக் எண்டால் ஆரெண்டு தெரியாமல் இருக்கும். தெற்காசிய விளையாட்டுப் போட்டியளில 100 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம், அஞ்சலோட்டம் எண்ட மூண்டு போட்டியளில இந்த வருசம் முதலாமிடம் எடுத்த தங்கப்பெண்தான் பாத்திமா ஷபியா யாமிக். ஆனால் அவான்ர பேர் கனபேருக்குத் தெரியாது. மீடியாக்காரரும் அவாவை எட்டியும் பாக்கேலை. உண்மையில செவ்வந்தியைப் போய் வளைச்சு வளைச்சு வீடியோ எடுக்கிறதால நாட்டுக்கு என்ன லாபம்? ஆனால், பாத்திமா ஷபியா யாமிக் எங்கட நாட்டின்ர பேரை சர்வதேசத்தில திரும்ப ஒருக்கா நல்லவிதமா உச்சரிக்க வைச்சிட்டா. அப்பிடிப்பட்ட பிள்ளை தங்கப்பதக்கத்தோட நாட்டுக்கு வரேக்க, எல்லாருமாத் திரண்டு போய், தலையில தூக்கிவைச்சுக் கொண்டாடியிருக்க வேணுமெல்லோ. ஆனால் "நாங்கள் செவ்வந்தியைத்தான் கொண்டாடுவம், அப்பதான் எங்களுக்கு லைக்ஸ் வரும்" எண்ட நினைப்பிலேயே எல்லாரும் இப்ப இருக்கிறம் கண்டியளோ.

padsi@uthayan.com

-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள்வழியில் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப் பிடிப்பது நல்லது. தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**இடபம்:** கணவன் - மனைவிக்கிடையே அந்நி யோன்யம் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர் கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த் தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியா பாரத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மிதுனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். வீண்அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை யைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். ஆனாலும், உற்சாகத்துக் குக் குறைவிருக்காது. பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத் தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள். மாலையில் பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படு வீர்கள். உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் அருகிலுள்ள கோயிலுக் குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரம் வழக்கம் போலவே இருக்கும்.

**துலாம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்ப டும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டா கும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கி யத்துவம் கிடைக்கும். குடும்பத்துடன் உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்க ளுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார் கள். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங் களின் சேர்க்கை உண்டாகும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். ஒரு சிலருக்கு வெளியூரில் இருந்து எதிர் பார்த்த சுபச்செய்தி கிடைக்கக்கூடும்.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்குத் தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவு களைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படு வீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவை களை நிறைவேற்றுவீர்கள்.

### இந்திய அரசாங்கத்தால்

# கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு ரூ. 2,371.83 மில்லியன் நன்கொடை

**கொழும்பு,ஒக்.30**

**இந்தியாவின் பல்துறைசார் அனுசரணையின்கீழ், கிழக்கு மாகாணத்தில் 33 கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்தியா 2,371.83 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கவுள்ளது.**

இதுதொடர்பில் இந்திய- இலங்கை அரசாங்களுக்கிடையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் மாதம் கையொப்பமிடப்பட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கமைய ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும், இந்தியத்தூதரகம் மற்றும் பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கும் இடையில் வேறுவேறாகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்படவேண்டியுள்ளது. அதற்கமைவாக 33 கருத்திட்டங்களுக்கான 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், இந்தியத்தூதரகம் மற்றும் பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும் இடையில் கையொப்பமிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (க-இ)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில், கந்த சஷ்டி உற்சவத்தின் திருக்கல்யாண உற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது. தொடர்ந்து நல்லூர்க் கந்தவேற்பெருமான் வள்ளிதெய்வயானை சமேதராக மணவாளக் கோலத்துடன் அடியவர்கள் புடைசூழ உள்வீதி, வெளிவீதியில் பவனி வந்தார். (க-66)



## பரிசில் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.30

அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்தின நிகழ்வு அச்சுவேலி மத்திய கல்லூரியின் இளையதம்பி ஞானபகாரத்த மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் சி.சதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி சாரதா தேவி ஆனந்தசயனன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலக கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.கண்ணதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25)



## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சாவகச்சேரி, ஒக். 30

சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு சாவகச்சேரிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான விழிப் புணர்வுக் கருத்தரங்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் எவ்.சீ.சத்திய சோதி தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடை பெற்றது.

வளவாளராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மெய்யியல்துறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரை யாளர் திரவியநாதன் திலீபன் கருத்துரை வழங்கி னார். நிகழ்வில் உதவிப்பிரதேச செயலாளர், பதவிநிலை உத்தியோகத்தர்கள்,கிராம அலுவலகர் கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 9)

## இலக்கிய விழா

கிளிநொச்சி, ஒக்.30

பச்சிலைப்பள்ளிப் பிரதேச இலக்கிய விழா பிரதேச செயலக மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இலக்கிய மாத வேலைத்திட்டத்தின்கீழ் இலக்கிய விழா நடத் தப்படுகிறது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலர் திருமதி ஹ.சத்தியஜீவிதா, சிறப்பு விருந்தினராக கிளி நொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் [illegible] ஆகியோர் கலந்துகொள்வர். (ச-9)

## நிறுவுநர் நினைவுதினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக்.30

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் அண்மையில் கல்லூரியில் இடம்பெற் றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணப் பிர திப் பிரதம செயலாளர் இ.சிவரூபன் கலந்துகொண் டார். (ச-41-63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## கல்விக்குத் தேவை கால நீட்சியல்ல...!

ஜனவரி மாதத்திலிருந்து பாடசாலை நேரம் பிற்பகல் 2 மணிவரை நீடிக்கப்படும் என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று மீண்டும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறது கல்வியமைச்சு . இந்த முடிவு, தேசிய கல்வி நிறுவகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாகவும், கல்வி அமைப்பின் சீர்திருத்த முயற்சியின் ஒரு பகுதியாகவும் இருப்பதால் ஒருபோதும் இந்த நேரநீடிப்புக்கொள்கையில் இருந்து தாம் பின்வாங்கப் போவதில்லை எனவும் கல்வியமைச்சு தெரிவித்திருக்கிறது. ஒரு பாடவேளையை ஒரு மணித்தியாலமாக நீடிப்பதற்கே முதலில் ஆலோசிக்கப்பட்டாலும், பின்னர் சில நடைமுறைச் சிக்கல்களால் ஒரு பாடவேளைக்கு 50நிமிடம் எனத்தீர்மானிக்கப்பட்டதால், பாடசாலைநேரத்தை பிற்பகல் இரண்டு மணிவரை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்ட தாக, தமது தரப்புக் காரணகாரியங்களையும் கல்வியமைச்சு அடுக்கிவைக்கத் தவறவில்லை.

ஒரு நாணயத்துக்கே இருபக்கங்கள் இருக்கும்போது, இந்தத் திட்டத்துக்கும் சாதகம், பாதகம் என இரு அம்சங்களும் இருக்கவே செய்கின்றன. மாணவர்கள் பாடசாலையில் செலவிடும் நேரத்தை அதிகரிப்பதன்மூலம் பாடப் பகுதிகளை முழுமையாகக் கற்றுக்கொள்ளும் வசதி கிடைக்கும். தற்போதைய பாடத்திட்டம் மிகப்பெரிய, பரந்தளவிலான விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளநிலையில், கூடுதல் நேரம் கிடைத்தால் ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடத்தையும் ஆழமாக எடுத்துரைக்கும் வாய்ப்பைப் பெறமுடியும். இதனால் நுனிப்புல் மேயாமல் மாணவர்கள் ஒவ்வொரு பாடப்பகுதியையும் ஐயம் தெளிவுறக் கற்கலாம். மேலும், மாணவர்கள் கல்விசார் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கூடுதல் ஈடுபாட்டுடன் பங்குபற்றவும் முடியும். இதனால் மாணவர்கள் தனியே புத்தகப்பூச்சிகளாக இல்லாமல் எல்லாத்துறைகளிலும் ஆளுமை மிக்கவர்களாக மாறும் சந்தர்ப்பத்தையும் இந்தப் பாடசாலைநேர நீடிப்பு வழங்குமென நம்பலாம். ஆனால் இவ்வாறு பாடசாலைநேரத்தை அதிகரிக்கும் திட்டத்தில் சில பாதக அம்சங்களும் இருக்கவே செய்கின்றன. நீண்டநேரம் இடைவெளியின்றித் தொடர்ச்சியாகக் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதால், மாணவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் அபாயம் உள்ளது. காலை நேரத்திலிருந்து பிற்பகல் 2 மணிவரை பள்ளியில் இருப்பது மாணவர்களுக்கு மனதளவில் சோர்வை ஏற்படுத்தும். போக்குவரத்து வசதியில்லாத கிராமப்புற மாணவர்கள் வீடு திரும்பும் நேரத்தில் சிரமத்தை எதிர்நோக்குவர். வெப்பமான கால நிலையில் பிற்பகல் நேரப் பாடங்கள் பயனுள்ளதாக அமையாது என்பது பல ஆசிரியர்களின் அனுபவபூர்வமான கருத்தாகும். மேலும், ஆசிரியர்களுக்கான பணிநேரம் நீளுவதால் அவர்களின் தனிப்பட்ட நேர ஒழுங்கும் பாதிக்கப்படும்.

இத்தகைய சூழ்நிலையில் மாற்றுத்திட்டங்களை ஆராய்வது அவசியம். பாடசாலை நேரத்தை நீடிப்பதற்குப் பதிலாக, பாடத்திட்டத்தை மீளாய்வு செய்து, தேவையற்ற பகுதியைச் சுருக்குவது இதற்குச் சிறந்த தீர்வாக இருக்கும். கல்வி என்பது மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் சிந்தனைத் திறனையும் வளர்க்கும் கருவி. அதனை கால அளவில் நீடிப்பதை விடவும், தரத்தில் மேம்படுத்துவதுதான் முக்கியமானது. ஆகையால், பாடசாலை நேரத்தை அதிகரிக்க முதல், அதனால் ஏற்படும் விளைவுகளையும் பரிசீலித்து, மாணவர் நலனைக் கருத்திற்கொண்ட நடைமுறைச்சாத்தியமான முடிவே கல்வி அமைப்புக்கு உண்மையான முன்னேற்றத்தை அளிக்கும்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





### நாளொரு நல்வார்த்தை

காயம், பயம் மற்றும் விரக்தியின் வெளிப்புற வெளிப்பாடே கோபம்.

-- பில் மெக்ரா--




## தேங்காய் விலையேற்றத்தில் குளிர்காயும் இடைத்தரகர்கள்



**கொழும்பு,ஒக்.30**

**இடைத்தரகர்கள் இலாப மீட்டுவதனூடாகவே தேங்காய்க்கான விலை அதிகரித்துள்ளதாக தெங்கு உற்பத்திச்சபை தெரிவித்துள்ளது.**

இதன்படி, ஏலத்தில் 134 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் தேங்காய் ஒன்று 180 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனூடாக இடைத்தரகர்கள் 40 முதல் 50 ரூபா வரை இலாபமீட்டுகின்றனர்.

தேங்காய்களுக்கு கட்டுப்பாட்டு விலை இல்லாததே இந்த விலை உயர்வுக்குக் காரணம். தேங்காய் உற்பத்தி கடந்த ஆண்டு 2,754 மில்லியனில் இருந்து இந்த ஆண்டு 2,800 மில்லியனாக உயர்ந்துள்ளது, அரசாங்க ஆதரவுடன்கூடிய மேம்பாட்டு முயற்சிகளின்கீழ் அடுத்த மூன்று ஆண்டுகளில் 4,200 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படும்.

தேங்காய் உற்பத்தி அதிகரித்துள்ளநிலையில் நுகர்வோருக்கு அதன் பலனை அடையும் வகையில் விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் சபையின் தலைவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். (ச-இ)

## ‘மொந்தா’ புயல் கரை கடந்தது!

சென்னை,ஒக்.30

இந்தியாவின் ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினம் கலிங்கப்பட்டினம் ஊடாக நேற்றுப் புதன்கிழமை அதிகாலையில் ‘மொந்தா’ புயல் கரையைக் கடந்தது.

வங்களா விரிகுடாவில் தென்மேற்கு - தென்கிழக்குப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ‘மொந்தா’ புயல் உருவானது. இந்தப் புயலானது தமிழ்நாடு ஆந்திராவை நோக்கி மணிக்கு 17 கிலோமீற்றர் வேகத்தில் நகர்ந்து வந்த நிலையில், அதிதீவிர புயலாக வலுப்பெற்றது. அதனையடுத்து நேற்று அதிகாலையில் ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினம் கலிங்கப்பட்டினம் ஊடாகக் கரையைக் கடந்தது. (ச-இ)

## மானியத்தில் டைல்ஸ்கள்!

கொழும்பு,ஒக்.30

எதிர்காலத்தில் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் டைல்ஸ்கள் பொது மக்களுக்கு மானிய விலையில் கிடைக்கும் என அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

இதற்காக, அரசாங்கம் புதிய திட்டமொன்றை செயற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## பலத்த காற்று எச்சரிக்கை!

கொழும்பு,ஒக்.30

மேற்கு, சப்ரகமுவ, மத்திய, தெற்கு, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்கள் மற்றும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களத்தால் பலத்த காற்று வீசும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பலத்த காற்றினால் ஏற்படும் சேதங்களைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ச-இ)



## பயிர்ச்செய்கை சேதங்கள் மதிப்பாய்வு

கொழும்பு,ஒக்.30

சமீபத்தில் பெய்த கனமழை காரணமாக நெற்செய்கை உள்ளிட்ட ஏனைய பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநலக் காப்பீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்று, நிவாரணம் வழங்குவதற்கான திட்டங்களைத் தயாரித்து வருவதாக விவசாய மற்றும் கமநலக் காப்பீட்டுச் சபை குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

**நாளை** வெள்ளிக்கிழமை - ஐப்பசி 14
31.10.2025
சுபநேரம் : 06.03 - 07.33
ராகுகாலம் : 10.33 - 12.03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுமைபெறாத நிலையில்

# முத்துஐயன்கட்டுக்குளம் ஏற்றுநீர்ப்பாசனத் திட்டம்



முல்லைத்தீவு, ஒக்.30

முல்லைத்தீவு முத்துஐயன்கட்டுக்குளத்தின் கீழான 4,5ஆம் வாய்க்கால் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் மின்மாற்றி பொருத்தப் படாததால் முற்றுப்பெறாமல் காணப்படுகின்றது என்று பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தக் குளத்தின்கீழ் ஒட்டுசுட்டான் தட்டையமலைக் கிராமமக்கள் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில் இந்த வேலைத்திட்டம் குறையாகக் காணப்படுவதால் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாது வாழ்வாதாரப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி குறையாகவுள்ள வேலைத்திட்டத்தை நிறை வுறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-246)

## இலங்கை இனவழிப்புத் தொடர்பில்


# சர்வதேச விசாரணை முன்னெடுக்க சுவிஸ் அரசு ஆதரவளிக்கவேண்டும்

### அந்தநாட்டின் சமூக ஜனநாயகக் கட்சி தீர்மானம்

**கொழும்பு, ஒக்.30**

**இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்புத் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற் கொள்வதற்கு சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண் டும். பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று சுவிட்ஸர்லாந்து சமூக ஜனநாயகக் கட்சி அதன் மாநாட்டில் ஏகமன தாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

இந்தத் தீர்மானத்தில் 'ஈழத்தமிழர் களுக்கு எதிராக முன்னெடுக்கப் பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட வன் முறைகள், படுகொலைகள், மிக மோசமான மனித உரிமை மீறல் களை வன்மையாகக் கண்டிக்கி றோம்' எனக் குறிப்பிடப்பட்டுள் ளது. இலங்கையில் இடம்பெற்ற மீறல்களை ஐக்கிய நாடுகள் இன வழிப்புப் பிரகடனத்தின்படி இன வழிப்பாகக் கருதமுடியுமா என் பது தொடர்பாக சர்வதேச கட்ட மைப்புகளின் ஒத்துழைப்புடன் ஆராயவேண்டும் என்றும் சுவிட் ஸர்லாந்து அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள் ளது. அதுமட்டுமன்றி இலங்கை யில் இடம்பெற்ற போர்க்குற்றங் கள் தொடர்பில் சுயாதீன சர்வ தேச விசாரணைகளை முன்னெ டுப்பதற்கும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான முயற் சிகளுக்கும் சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் முழுமையான ஒத் துழைப்பை வழங்கவேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள் ளது. (எ-இ)



# சந்தைப்படுத்தல் இன்றி பூசணிக்காய்கள் தேக்கம்

### விவசாயிகள் அவதி

முல்லைத்தீவு, ஒக்.30

அதிகமான பூசணிக்காய்கள் சந்தைப்படுத்தலின்றி தேங்கிப் பழுதடைகின்றன என்று முல்லைத்தீவு விவ சாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் சுதந்திரபுரம் கொலனியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் அறுவடை செய்த சுமார் 10 ஆயிரம் கிலோவுக்கு அதிகமான பூசணிக்காய்ச் சந் தைப்படுத்தல் இன்மையால் தேங்கியுள்ளன. அதிக ளவான பூசணிக்காய்கள் சந்தைக்கு எடுத்துவரப்படுவ தால் அவற்றுக்கான கிராக்கி சரிவடைந்துள்ளது.

சந்தைக்குக் கொண்டுசென்ற பூசணிக்காய்கள் மீண் டும் வீட்டுக்கு எடுத்துவந்து குவித்துவைக்கப்பட்டுள்ளன. இவை நாளுக்கு நாள் பழுதடைந்தும் செல்கின்றன.

சுமார் நான்கு ஏக்கர் காணியில் பயிரிடப்பட்ட பூசணிச் செய்கைக்கு நான்கு இலட்சம் வரை செலவு செய்யப் பட்டுள்ளது.

இதனால் பெரும் நஷ்டமடைந்து வாழ்வாதாரப் பாதிப் பும் ஏற்பட்டுள்ளதாக அந்த விவசாயிகள் தெரிவித் துள்ளனர். (ச-213)



# கால்நடைகளுக்கு மருந்து வழங்க மாகாணப் பொறிமுறை அவசியம்

### வடக்கு ஆளுநர் ஆலோசனை

கால்நடைகளுக்கான மருந்து வழங்கலை இலகுபடுத்த, மாகாண ரீதியில் சிறந்த பொறி முறையை உருவாக்கவேண் டும். அதேவேளை வன்னிப் பிர தேச கால்நடை மருத்துவர்க ளுக்கு முன்னுரிமை அடிப்படை யில் வாகன வசதிகளும், வரு டாந்த இடமாற்றத்தில் ஆளணிப் பற்றாக்குறையும் நீக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கால்நடை மருத்துவர்கள் மற்றும் நீர்ப்பாச னப் பொறியியலாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற் றும் அபிவிருத்தி முன்மொழிவு கள் தொடர்பான கலந்துரையா டல், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

வடக்கு மாகாணத்தில் விவசா யம், மீன்பிடி ஆகியனவற்றுக்கு அடுத்த நிலையில் கால்நடை வளர்ப்பு உள்ளது. கால்நடை களை நம்பித்தான் பல குடும்பங் களின் வாழ்வாதாரமும் உள் ளது. அந்தக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். வன்னி போன்ற பிரதேசங்களில் மக்கள் தங்கள் கால்நடைகளுடன் அலைந்து திரிந்து சிகிச்சைய ளிப்பதில் சிரமங்கள் உள்ளன. எனவே கால்நடை மருத்துவர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்- என்றார். (க-27)


# ஹைஏஸ் விபத்து; சாரதி அருந்தப்பு

முல்லைத்தீவு, ஒக்.30

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட ஏ-9 வீதியின் 227ஆவது கிலோமீற்றர் பகுதியில் கொழும் பிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்த ஹைஏஸ் வாகன மொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி யுள்ளது.

இந்த விபத்து நேற்று நடந்துள் ளது. வாகனத்தில் சாரதி மாத் திரமே இருந்துள்ளநிலையில் அவர் தெய்வாதீனமாக சிறிய காயங்களுடன் தப்பியுள்ளார்.

மாங்குளம் பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர். (ச-இ)



# மன்னார் மக்களுக்கு ஆதரவாகக் களத்தில் மெதடிஸ்த திருச்சபை

மன்னார்,ஒக். 30

மன்னாரில் காற்றலை மின் உற்பத் தித் திட்டத்தை எதிர்த்துப் போராடும் மக்களுக்கு இலங்கை மெதடிஸ்த திருச்சபை ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சபையின் முகாமைக் குரு கந்தையா ஜெகதாஸ் தெரிவிக் கையில்,

மன்னார் மக்களின் அன்றாடப் பிரச்சி னைகளுள் ஒன்றாக இந்த காற் றாலை விவகாரம் மாறியுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு அனுமதி கொடுக் கப்பட்டுவிட்டது.

அது நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசாங்கத்தரப்பில் தெரிவிக்கப்படு கின்றது. உலக நாடுகள் பலவற்றில் மக்கள் வாழிடம் அற்ற பகுதிகளில் தான் இவ்வாறான திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டுவருகின்றன.

எனவே மக்களின் கோரிக்கை நியாய மானது. இவர்களுக்கு ஆதரவாக நாமும் பங்குபற்றி, போராட்டத்துக்கு வலுச்சேர்க்க முடிவு செய்துள்ளோம்- என்றார். (க-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்குப் படகில் சென்ற 3 இலங்கையர் நாடு கடத்தல்

கொழும்பு,ஒக்.30
இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக படகு மூலம் தமிழ்நாடு சென்றிருந்த இலங்கையர் மூவர் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
இவர்கள் மூவரும் 15 நாள்களுக்கு முன்னர், சட்டவிரோதமாக படகில் தமிழ்நாட்டுக்குள் நுழைந்துள்ளனர். மூவரிடமும் இந்தியாவில் தங்குவதற்கான எந்த ஆவண மும் இல்லை. அத்துடன் இலங் கையில் இவர்கள்மீது பல்வேறு வழக்குகள் நிலுவையில்உள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து இலங்கை செல்லும் விமானத்தில் மூன்று பேரும் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-இ)

## யோஷித வழக்கு டிசெம்பரில்

பணமோசடித் தடுப்புச் சட்டத்தின் கீழ் யோஷித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீதான விசாரணை டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
2009ஆம்ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி முதல் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சுமார் 59 மில்லியன் ரூபா பணத்தை 3 வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்துள்ளமை தொடர்பில் யோஷித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ச)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக மூத்த உறுப்பினரும்,
ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ (ரெக்ஸ்ரைல்ஸ்)
உரிமையாளருமாகிய

### அமரர். சடையர் லிங்கநாதன்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

**யாழ் வணிகர் கழகம்**

(CR 45188) E

## அரச பொது வைத்தியசாலை நலன்புரிச்சங்கம்

**பதவி வெற்றிடங்கள்**

**நோயாளர் நட்புறவாளர் (BEFRIENDER) பதவி**

யாழ் போதனா வைத்தியசாலையினை நாடும் நோயாளிகளின் அடிப்படைத் தேவைகளை இலகுபடுத்தி நோயாளரின் சுகாதார நலன் பெறுதலை வினைத்திறனாக்கும் நட்புறவாளர் (Befriender) சேவைத்திட்டத்தில் இணைந்து கொள்ள ஓர் வாய்ப்பு.

**வேலை தொடர்பான விபரங்கள்**

- பணி வகை : பகுதி நேரம்
- பணி நேரம் : ஒரு பணி நேரம் 6 மணிநேரம்
  காலை : காலை 06.00 - மதியம் 12.00
  மதியம் : மதியம் 12.00 - மாலை 06.00
- சம்பளம் : ஒரு பணி நேரத்திற்கு ரூ.1,250
- சலுகைகள் : EPF மற்றும் ETF நிதிப் பங்களிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**விண்ணப்பதாரர்கள்**

மருத்துவம், உளவள ஆலோசனை சார்ந்த துறையில் கற்கையினை (NVQ 3 Level) பூர்த்தி செய்தவர்கள் அல்லது அதே துறையில் குறைந்தது 3 வருட அனுபவத்துடன் சமூக சேவைப் பின்னணி உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**பயிற்சி :** பணி சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படும்.


(CS 59747) E

விண்ணப்பிக்கும் முறை: உங்கள் சுயவிபரக்கோவையினை கீழுள்ள முகவரிக்கு முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
முடிவுத்திகதி : 15.11.2025

021 222 3348
thwelfaresocity@gmail.com

நலன்புரிச்சங்க அலுவலகம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

## பொது அறிவித்தல்




**திரு.ரத்தினம் சதீஷ்**
**(NIC No: 19820860 4000)**

மேற்படி படத்தில் உள்ள ரத்னம் சதீஷ். (NIC 19820860 4000) என்பவர் இல-187 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள எமது வியாபார நிறுவனத்தில். (நர்மதா கோல்ட் சென்டரில்) 20.10.2025 ஆம் திகதியில் இருந்து சேவையில் இல்லை, எனவே மேற்குறித்த நபருடன் இனிமேல் மேற்கொள்ளப்படும் நிறுவனம் சார்ந்த எந்த ஒரு வியாபார கொடுக்கல் வாங்கலுக்கும் நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்
நர்மதா கோல்ட் சென்டர்
0212221933

(CS 59758) A

# மரண அறிவித்தல்



## விசுவநாதி சபாபதிப்பிள்ளை (சபாபதி)

4ம் வட்டாரம், மண்கும்பான் கிழக்கை பிறப்பிடமாகவும், 47/11 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதி சபாபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (29.11.2025) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்பு கணவரும், காலஞ்சென்ற கந்தையா - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், தவநாயகம், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் கனகலிங்கம், கணேசலிங்கம், காலஞ்சென்ற சர்வேஸ்வரி மற்றும் பற்பராதேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி, சுலோசனா, பங்கி, நந்தினி, காலஞ்சென்ற நிர்மலகாந்தன் மற்றும் சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், செல்லத்துரை மற்றும் பூபதி, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயானந்தன் - தவப்பிரியா, சிவரூபன் - ஜெயப்பிரியா, கோபிநாத் - ஜசிந்தா, முரளிதரன், மயூரன், கஜரூபன் - சங்கீதா, ஜெசிக்கா, லிந்தன், ஜீவிதா, ஜோன்சன் - கீர்த்தனா, கிதுஷா, கபில்ராஜ், கஜன் - சர்மிளா, சந்துரு - துவாரகா, சபேஷ் - சங்கவி ஆகியோரின் பேரனும், தனுசியன், திகாசியன், துளசிகன், திசானா, வினுஷ்கா, விகான், ஆதிரா, திஷாரா, சஸ்வின், அகஸ்தியன், அயானா, அகன், தியோனிசியா, அனனிக்கா, தன்விக், அகலியா, ஆதித்யா, தியாகு ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2025) வியாழக்கிழமை பிற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS/59765) J-1

தோற்றம்
27.08.1927

மறைவு
29.10.2025

தொடர்புகளுக்கு:
077 660 0351 (மகள்), 076 048 4801 (பேரன்)
077 345 8868 (பேரன்), 076 350 7972 (பேரன்)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல நிறுவனத்துக்கு விநியோக நடவடிக்கைகளுக்கு விற்பனை உதவியாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
152, Hospital Road, Jaffna.
**077 911 54 08**

(CS 59755) A


## இலங்கை போக்குவரத்துச் சபை (வட பிராந்தியம்) பாவனையில் இருந்து கழிக்கப்பட்ட ரயர்கள் ஏல விற்பனை

இலங்கை போக்குவரத்துச்சபை வட பிராந்தியத்தில் உள்ள சாலைகளில் கழித்து களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ரயர்களை ஏல விற்பனை மூலம் விலை மனுக்கோரி விற்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கிழமை நாள்களில் பிராந்திய காரியாலயத்தில் ஏல விற்பனைப் பத்திரத்தை பெற்று பூரணப்படுத்தி நிபந்தனைகளின்படி கூறுவிலை சமர்ப்பிக்கும் பெட்டியினுள் "**தலைவர் கூறுவிலைச் சபை. இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு)** என்று முகவரியிட்டு 2025.11.13ம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னதாக போடப்பட வேண்டும்.

அன்றைய தினமே பிற்பகல் 15.00 மணிக்குப் பின் ஏல விற்பனைக்கான நடவடிக்கை இடம்பெறும்.

விருப்பமானவர்கள் கிழமை நாள்களில் காலை 09.30 மணி தொடக்கம் பிற்பகல் 15.00 மணிவரை வட பிராந்தியத்தில் உள்ள யாழ்சாலை, காரைநகர்சாலை, கிளிநொச்சிசாலைகளில் கழிக்கப்பட்ட ரயர்களைப் பார்வையிடலாம்.

2025.10.30ம் திகதி தொடக்கம் 2025.11.12ம் திகதி வரை பிராந்திய காரியாலயத்தில் விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும்.

077 105 8100
077 105 8103

**தலைவர்,**
**கூறுவிலைச் சபை, வடபிராந்தியம்.**

(CS 59756) A

# மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 12 . 1949 — மறைவு 28 . 10 . 2025

## சேனாதிராஜா சுரேந்திரநாதன்

**(ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்யத்தின் அங்கத்தவர் - கணக்காளர், ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர் - பிராந்திய சுகாதாரத் திணைக்களம் வவுனியா)**

யாழ். இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் 52/5, 1/1 சரணங்கரா றோட். தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராஜா சுரேந்திரநாதன் அவர்கள் 28.10.2025 செவ்வாய்க்கிழமை காலை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடராஜார் - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், மங்கையர்கரசி அவர்களின் அன்புக்கணவரும், கோசலைகோபனின் பாசமிகு தந்தையும், சத்தியலட்சுமி, இரவீந்திரநாதன், காலஞ்சென்றவர்களான இராஜதிலகம், சித்திராலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரரும், குமாரசுப்பிரமணியம், பராசக்தி, தனலட்சுமி, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும், காலம்சென்றவர்களான அற்புதசுந்தரி, சுப்பிரமணியம் - சரஸ்வதி, முத்துக்குமாரசாமி, ஆறுமுகசுவாமி - சிவலோகநாயகி, லோகநாயகி - அப்புத்துரை ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அம்பிகாவதி - முதலித்தம்பி, பூரணம் கந்தசாமி, பரமேஸ்வரி சோமசுந்தரம், காலஞ்சென்ற செல்வநாயகம் - யுவதி, காலஞ்சென்ற பாலகணேசன் - பத்மா, காலஞ்சென்ற சிவபாலகணேசன் - பரமேஸ்வரி, காலஞ்சென்ற இந்திராதேவி, சித்திராதேவி, முரளிதரன், குமுதினி, முகுந்தன், வாகினி, மாதினி, ஜனனி, துஷ்யந்தன் ஆகியோரின் மைத்துனரும், சியாமசுந்தரன், அபிராமி, தாரணி, பாமினி, பிரணவரூபன், பிரணவரூபி, பிரணவசோபினி, சிவகணேசமூர்த்தி, மல்லிகாதேவி, ஞானேந்திரன், ஜெயரூபன், சித்திரா ஆகியோரின் சித்தப்பாவும், பவதாரிணி, நாதஸ்வரூபிணி (இனிமை), வித்தியானந்தி, சேயோன், பிரதாப், நடராஜாபோத்மன், அருள்பாலமேனன், தவத்திரு வேலன் சுவாமிகள், யாழினீஸ்வரி, சிவவல்லி, தங்காகரன் ஆகியோரின் மாமனாரும், பவதரன், விழினி, சுலக்சுமி, அமிர்தகி, ஆர்த்திகன், அக்சயன், கலாபன், மகீபன், அஞ்சனா, ஓவியா, அகரன், வேணுயன், கருசிகன், கார்த்திகன், அட்சரன், லதுசிகா, கிருசிகா, கோபிகா, யதுசிகா, ரக்சிகா, கேசவராம் ஆகியோரின் அன்புத்தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 30.10.2025 வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 1.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று மாலை 3 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**கோசலைகோபன் (கோபி) (மகன்) [illegible]**

(CR 46187) E

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 29 . 04 . 1958 — மறைவு 01 . 10 . 2025

கடந்த 01.10.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் இராசையா இராஜமோகன்

**(இளைப்பாறிய மாநகரசபை ஊழியர் - நீர்வேலிப்பகுதி)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 31.10.2025 வெள்ளிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
இல.24, கண்டி வீதி
அரியாலை, யாழ்ப்பாணம்
**077 9297919,**
**077 109 9918**

(CS 59783) E

## ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.30

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் சஞ்சிகையின் 334 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது. சமாதான நீதிவான் ஐ.கோ. சந்திரசேகரம் மலரின் வெளியீட்டுரையையும், சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் மதிப்பீட்டுரையையும் ஆற்றவுள்ளனர்.

(ச-66)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 29 . 12 . 1983 — விண்ணில் 30 . 09 . 2025

## அமரர் ரவீந்திரன் சுரேந்திரன்

பாசம் நிறைந்த உன் விழிகளின் ஏங்கும்
பார்வைக்குள் நாள் தோறும் நனைந்தோம் நாம்.
அம்மாவின் பார்வைக்குள் நாற்பத்திரெண்டு வயதை
எட்டியும் நீ குழந்தையாகவே இருந்தாய்!

உனக்குக் காய்ச்சல் வந்தால் நம் எல்லோருக்கும்
காய்ச்சல் வந்தது போன்ற உணர்வில் இருப்போம்.
உனது முகம் வாடினால் அன்றைய நாளும் பொழுதும்
எம் மனம் நிம்மதி அற்றுப்போய் இருப்போம்!

உன் தம்பியின் அரவணைப்பில் மேலோகத்தில்
உன் வாழ்க்கை இனிமை நிறைந்ததாய் உணர்கிறோம்.
வழமை போலவே நம் மனங்களில், உணர்வில் நீ
எப்போதும் எங்களுடன் வாழ்வதாய் இருப்போம்!

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!*

**உங்கள் பிரிவால் வாடும்**
**குடும்பத்தினர்.**

**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

(CS 59757) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மண்ணில் இயங்கும் இலங்கையின் ஒரே வங்கியான

# இலங்கை வங்கி சென்னைக் கிளை

## 30 ஆண்டு கால பெருமைமிகு வங்கிச் சேவையை கொண்டாடுகிறது








இந்திய மண்ணில் இயங்கும் இலங்கையின் ஒரே வங்கியாக இலங்கை வங்கி சென்னைக் கிளை மூன்று தசாப்தங்களாக, நிலைத்து நிற்கின்றது.

இரு நாடுகளையும் இணைக்கும் ஒரு பாலமாக இருந்து நம்பகமான சேவையின் 30 ஆண்டுகாலத்தை கொண்டாடும் இவ்வேளையில், உங்களோடு கைகோர்க்க எம்மை அழைத்தமைக்கு எமது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்கள், பங்காளர்கள் மற்றும் பங்குதாரர்களான உங்களுக்கு எமது நன்றிகள். உலகளாவிய அணுகுமுறையுடன் உள்ளூர் கலாச்சாரத்தின் உணர்திறனோடு தனித்துவத்தையும் தொடர்ச்சித் தன்மையையும் பெற்றுக் கொடுத்து தனிப்பட்ட வங்கிச் சேவையிலிருந்து பெருநிறுவனத் தீர்வுகள் வரை, நாம் உங்களுடன் இணைந்து வளர்ச்சி பெற்றுள்ளோம்.

**எல்லைகளைக் கடந்து செல்லும் வங்கியியல் அனுபவத்தைப் பெற்றிட நாம் உங்களை அழைக்கின்றோம்.**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

1975 BOC CALL CENTRE
www.boc.lk


AA-(lka) Fitch Ratings, Brand Rating: AAA- (Brand Finance Lanka)
இலங்கை வங்கி
உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
https://www.boc.lk/contact

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 03 . 1937



மறைவு 29 . 10 . 2025

## தில்லையம்பலம் நவரத்தினம் (மெம்பர்)

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் தொண்டமனாறு மற்றும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவரும் முன்னாள் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினருமான தில்லையம்பலம் நவரத்தினம் (மெம்பர்) அவர்கள் (29.10.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஞானலக்ஷ்மியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - ஜானகியம்மா தம்பதியரின் மருமகனும், கண்ணன், கரன், கிருபா ஆகியோரின் அன்பு தந்தையும், கலாநந்தி, கெவினா ஆகியோரின் மாமனாரும், கபிலன், முகிலன், ஹரிசன் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, சிவரூபராணி மற்றும் சரோஜினிதேவி, கஜலக்ஷ்மி ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2025) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**போக்காலை வீதி,**
**உடுப்பிட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**



வலயமட்ட சிறுவர் நாடகப் போட்டியில் அல்லாரை அ.த.க. பாடசாலை தென்மராட்சிக் கல்வி வலயத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்தப் போட்டி அண்மையில் நடைபெற்றது. 28 ஆரம்பப் பிரிவு மாணவர்களைக் கொண்ட இந்தப் பாடசாலை வலயத்திலுள்ள பல முன்னணி ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளது. (ஏ-41-159)

## தவறவிடப்பட்டள்ளது

பூலோகசிங்கம் பிரணவன். என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், வாகனக்காப்புறுதி பத்திரம் (License, Insurance) என்பன KKS Road - குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி. இராமநாதன் வீதியில் 29.10.2025 அன்று தவறவிடப்பட்டுள்ளன.
(சன்மானம் வழங்கப்படும்)

**077 618 4616**
ஏழாலை மேற்கு ஏழாலை

# சமாதி அடைந்துள்ளார்



தோற்றம் 02.01.1944 மறைவு 28.10.2025

## நாகராஜா
## விஸ்வஸ்ரீ கலாமணிதேவி

மதங்கமாமகரிசி ஆச்சிரமம், சர்வதேச மாதங்கி குரு பீடத்தின் தலைவி **நாகராஜா விஸ்வஸ்ரீ கலாமணி தேவி** சமாதி அடைந்துள்ளார்.


அன்னையின் இறுதிக் கிரிகைள் 30.10.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நிறைவுபெறும்.

இவ் அறிவித்தலை ஆச்சிரம பக்தர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல. 72, காரைக் காட்டு லேன்**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**கி.சிவகுருநாதன் (தலைவர்)**
**மாதங்கி சுவாமிகள்**
**076 545 9560**
**076 157 5730**
**011 288 4425**

# மரண அறிவித்தல்



தோற்றம் 27.12.1947 மறைவு 29.10.2025

## அப்பாக்குட்டி செல்வநாயகம்

**(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)**

சரசாலை வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் (நெதர்லாந்து Leiden)ஐ இடைக்கால வதிவிடமாகவும், சுன்னாகம் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி செல்வநாயகம் அவர்கள் நேற்று (29.10.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - மகிழம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசபை, செல்வராசா, காலஞ்சென்ற செல்வரத்தினம், சிவனேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவனேஸ்வரி, சிவப்பிரகாசம் (கனடா), தியாகலிங்கம், மகேந்திரலிங்கம் (கனடா), அமரர் திருமணி, அமரர் கிருஷ்ணசாமி, அமரர் பத்மநாதன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தினேஷ்குமார் (ஹொலண்ட்), பத்மறூபா (லண்டன்), பத்மறாஜி (லண்டன்), கிருஷ்ணறூபா (லண்டன்), விஷ்ணுறாஜ் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாந்தி, சபேஷ்குமார், கபிலன், அமிர்தறாஜ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நித்தீஷ், சேயோன், றுஷானா, றொஜிஷ், கஜீஷா, அக்ஷா, கிராஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2025) வியாழக்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் அன்னாரின் பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கதிரமலை வீதி,**
**சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

யோகேஸ்வரி (மனைவி) - 021 224 3682

பிள்ளைகள் -
தினேஷ் - +31640829014
றூபா - +447388888833
றாஜி - +447463448544 (0774549660)
கிருஷ்ணா - +447438218676
விஷ்ணு - +31610803392

(CS 30638) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில்...

மக்கள் பணத்தை பயன்படுத்தி, தனிப்பட்ட வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்ட நிலையில், ரணில் விக்கிரமசிங்க முன்னிலையானார்.

இதன்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், 'பிணை கோருவதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட மருத்துவ அறிக்கைகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட வேண்டும். குறித்த மருத்துவ அறிக்கைகளை கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரி உட்பட மூவரடங்கிய மருத்துவ அதிகாரிகள் குழுவால் மீளாய்வு செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்' என்று கோரிக்கையை முன்வைத்தார். இதையடுத்தே, அந்த மருத்துவ அறிக்கைகள் தொடர்பில் மீளாய்வு நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் நீதிமன்றத்தில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரிவித்ததாவது:

'சந்தேகநபர் பணத்தை மாத்திரம் தவறாகக் கையாளவில்லை. நீதிமன்றச் செயற்பாட்டையும் தவறாக கையாண்டுள்ளார். கடந்த வழக்குத் தவணையின்போது சந்தேகநபர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, மருத்துவ அறிக்கைகள் சிலவற்றை முன்வைத்து பிணை வழங்குமாறு கோரினார்.

சந்தேகநபர், இதயத்தில் உயிரணுக்கள் உயிரிழக்கும் நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக அன்று கூறப்பட்டது. சந்தேகநபரை விளக்கமறியலில் வைத்து நோய்கள் தொடர்பில் அறிக்கை கோருவதற்கான உத்தரவை நீதவான் அன்று பிறப்பிக்கவில்லை.

தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் கே.பீ.ஏ. விஜேசிங்க, ஆறு பேர் அடங்கிய மருத்துவக் குழுவின் ஊடாக பெற்றுக்கொண்ட மருத்துவ அறிக்கைக்கு அமையவே அனுஜ பிரேமரத்ன இந்த விடயங்களை தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவின்றி தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் இத்தகைய மருத்துவ அறிக்கையொன்றை எவ்வாறு கோர முடியும்? பொதுவாக ஒரு நோயாளிக்கு இத்தகைய அறிக்கையை கோர முடியுமா? முடியாது.

சந்தேகநபரின் சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது. அன்றையதினம் நேரடியாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டாளர் தரப்பிற்கு வழங்கப்படவில்லை.

சட்ட மருத்துவ அதிகாரி ஒருவர் ஆராயாமல் எவ்வாறு ஒரு மருத்துவ அறிக்கையை தனிப்பட்ட ரீதியில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்? இந்த மருத்துவ அறிக்கைகளில் சந்தேகம் உள்ளது. அத்துடன், தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெறும் நோயாளி ஒருவர் பொரிஸ் ஜொன்சனின் புத்தகம் ஒன்றை வாசிப்பதை அன்றுதான் நான் முதன்முறையாக கண்டேன். தீவிர சிகிச்சைப் பிரிவில் கவலைக்கிடமான நிலையில் இருக்கும் நோயாளிகளே அனுமதிக்கப்படுகின்றனர். அங்கு சிகிச்சை பெறுபவர் எப்படிப் புத்தகம் வாசிக்க முடியும்?

தீவிர கண்காணிப்பு பிரிவில் சிகிச்சை பெறுபவர், சிகிச்சை பெற்றதன் பின்னர் வேறு நோயாளர் விடுதிக்கு மாற்றப்படுவார். அங்கிருந்தே டிக்கெட் வெட்டப்படும். ஆனால் இந்த சந்தேக நபர் தீவிர கண்காணிப்பு பிரிவில் இருந்தபோது 'டிக்கெட்' வெட்டி வெளியேறியுள்ளார் - என்றார். (ம-44)

## வடக்கு...

பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்ற உறுதிமொழியை தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கியுள்ளோம். பரந்தப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குரிய நகர்வுகள் விரைவில் ஆரம்பமாகும். நிறைவேற்று அதிகாரம் பிரதமர் மற்றும் அமைச்சரவை வசம் இருக்கும். தனி நபரிடம் அதிகாரம் இருந்ததால்தான் இந்தநாடு வங்குரோத்து அடைந்தது.

கடந்த பத்து ஆண்டுகளாக மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் விட்ட தரப்புகள், 'தேர்தல் எப்போது நடைபெறும்?' என்று தொடர்ச்சியாக வினவுகின்றன. தேர்தல் எப்போது என அரசாங்கத்திடம் கேட்பது அவர்களின் உரிமை. அதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், மாகாணசபைகளைக் கைப்பற்றப் போவது நாங்கள்தான்.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மாகாணசபைகளையும் கைப்பற்றுவோம் - என்றார். (ம-44)

## நாளைமறுதினம்...

தடை விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை முதல்வர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் உள்தாவது:

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பொதுஇடங்களில் நவம்பர் மாதம் முதலாம் திகதிமுதல் வெடி கொளுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையிலும், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் செயற்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான அறிவுறுத்தல் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம-100)

## யாழ்.மாவட்டப்...

ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் யாழ். மேலதிக மாவட்டச் செயலர் சிவகரன், உள்ளூராட்சி ஆணையாளர் சுதர்சன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர், யாழ். மாநகர மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள் உட்படப் பலரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்தனர்.

குறிப்பாக, தூரசேவை பேருந்து நிலையத்தில் இருந்து இரு பேருந்து சேவைகளையும் இணைந்த சேவை நேர அட்டவணையின் பிரகாரம் முன்னெடுப்பதில் இருக்கின்ற பிரச்சினைகள் குறித்து கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உயர்மட்டக் கலந்துரையாடல் மூலம் சிறப்புப் பொறிமுறையை ஏற்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ம-26)

## போதைப்பொருள்களுடன்...

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், போதைப்பொருள் தடுப்புக் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் இருந்து போதை மாத்திரைகள் மற்றும் ஹெரோய்ன் என்பன மீட்கப்பட்டுள்ளன. அவர்களை நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-27)

## கழிவுகளை...

வந்த 11 இடங்கள் கண்காணிப்புக் கமராக்களால் அவதானிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

நல்லூர் பிரதேசசபையின் கழிவகற்றல் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை அண்மைக்காலமாக மிகவும் வினைத்திறனான வகையில் மேற்கொண்டு வருகின்றோம். இதன்படி, நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்கும் வகையில் 11 இடங்களை அடையாளப்படுத்தி அங்கு கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்தியுள்ளோம்.

அங்கு தொடர்ச்சியாகக் கழிவுகளை வீசுபவர்கள் அடையாளப்படுத்தப்பட்டு, கிராம அலுவலர்கள் ஊடாக அவர்களின் தகவல்கள் பெறப்பட்டு அபராதம் விதிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு பொது இடங்களில் கழிவுகளை வீசுபவர்கள் பலர் அடையாளப்படுத்தப்பட்டு கடந்த இரண்டு மாத காலத்தினுள் இரண்டு லட்சம் ரூபாவுக்கு மேல் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

குறித்த செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கென ஒரு தனி அலகும் நல்லூர் பிரதேசசபையில் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது மேலும் சில இடங்களில் குப்பைகள் கொட்டப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேலும் கடினமாயிருக்கும். ஆதலால், தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் பொதுமக்கள் செயற்படவேண்டும் - என்றுள்ளது. (ம-26,66,20)

## பொலிஸ்மா...

பயணம் மேற்கொண்டுள்ளார். ஆதலால், குறித்த கோரிக்கைக் கடிதம் சபாநாயகர் காரியாலயத்தின் ஊடாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம)

## இராணுவப்...

மிருந்த தனியார் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏக்கர் அளவுடைய காணியே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளது.

காணி விடுவிக்கப்பட்டமைக்கான ஆவணம் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரனிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. (ம-113)

## மூக்கால்...

குருதி வெளியேறி நேற்று உயிரிழந்துள்ளது.

அரியதாஸ் கஜிஷ்ணவி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

குறித்த குழந்தைக்குத் தாயார் பாலூட்டிய பின்னர் அந்தக் குழந்தை வாயாலும், மூக்காலும் குருதி வெளியேறி மயக்கமடைந்துள்ளது.

இதையடுத்து, குழந்தையை தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது அந்தக் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-26)



## ஆடை ஏற்றுமதி செப்ரெம்பரில் உயர்வு

கொழும்பு,ஒக்.30

கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கையின் ஆடை ஏற்றுமதி மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிற சந்தைகளில் வலுவான செயற்றிறன் காரணமாக, அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்துக்கு ஏற்றுமதி குறைந்த போதிலும், இலங்கையின் ஆடை ஏற்றுமதிகள் ஆண்டுக்கு ஆண்டு மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. 2025 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் மொத்த ஆடை ஏற்றுமதி 403.01 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

2024ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 1.58 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசன யாத்திரை நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.30
ஐப்பசி மாதக் கார்த்திகை விரதத்தை முன்னிட்டு இலங்கையில் சமாதானம் நிலைபெற வேண்டி இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் ஆலயம் நோக்கிய வேல்தாங்கிய புனித திருத்தலத் தரிசன யாத்திரை நாளை வெள்ளிக்கிழமை காலை06 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.
இந்த யாத்திரை அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கதிர்காமக் கந்தன் ஆலயத்தைச் சென்றடையவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-66)




# குற்றச்செயல்களில் ஈடுபட்டோர் வெளிநாடுகளில் பதுங்கமுடியாது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் திட்டவட்டம்

**கொழும்பு, ஒக்.30**
**வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாளக் குழு உறுப்பினர்களை நாட்டுக்குக் கொண்டு வந்து, சட்டத்தின் முன் நிறுத்துவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

அரச தொலைக்காட்சி அலைவரிசைக்கு வழங்கிய நேர்காணலில் அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
216 பேருக்கு எதிராக சிவப்பு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் பாதாளக் குழுவை சேர்ந்தவர்கள் அல்லர். சுமார் 82 பேரே பாதாளக் குழுவுடன் தொடர்புடையவர்கள். பாதாளக் குழுவைச் சேர்ந்தவர்களில் 17 பேர் இதுவரையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். பாதாளக் குழுவைச் சேர்ந்தவர்களில் அதிகளவானோர் டுபாயிலேயே இருக்கின்றனர். சிலர் வெளிநாட்டுச் சிறைகளில் உள்ளனர். இவர்களைக் கொண்டுவருவதற்குரிய இராஜதந்திர நடவடிக்கையும் இடம்பெறுகின்றது. இந்தோனேசியாவில் முன்னெடுக்கப்பட்டதுபோல எதிர்காலத்தில் நடவடிக்கைகள் இடம்பெறும். நாட்டில் குற்றச்செயல்களில் ஈடுபட்டுவிட்டு வெளிநாடுகளில் பதுங்கி வாழ்வதற்கு இடமளிக்கமாட்டோம். அவர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இதற்கு நீதி அமைச்சின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது - என்றார். (எ-44)

# அனைத்து நீதிமன்றங்களையும் டிஜிற்றல் மயமாக்க நடவடிக்கை

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.30
இந்தக் காலாண்டுக்குள் குறைந்தபட்சம் 50 அல்லது 60 நீதிமன்றங்களை டிஜிற்றல் மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் வழக்குத் தொடுப்பவர்களுக்கான செலவும் குறைவடையும் எனப் பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன தெரிவித்துள்ளார்.
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடுசெய்திருந்த தேசிய சட்டமாநாடு கடந்த திங்கட்கிழமை கண்டியில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
இலங்கையில் ஒருசில நிறுவனங்கள் தற்போது பகுதியயவில் டிஜிற்றல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றன.
எடுத்துக்காட்டாக, பதிவாளர் நாயகம் காரியாலயம், குடிவரவு குடியல்வு காரியாலயம், நீர் மற்றும் மின்கட்டணம் போன்றவை டிஜிற்றல் மயமாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நீதிமன்ற கட்டமைப்பு இன்னும் கைகளாலும் ஆவணங்களின் அடிப்படையிலுமே செயற்பட்டுவருகிறது.
8 ஆயிரம் பக்கங்களைக்கொண்ட வழக்கு ஆவணம் ஒன்றுக்காக, ஒரு தரப்புக்கு அதை நகல் அச்சிடுவதற்காக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் என்னிடம் சொன்னார்.
அந்த வழக்கின் ஆவணங்களுக்கான மொத்தச் செலவு 3 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகச் செலவாகியுள்ளது. இவ்வாறான செலவுகள் காரணமாக அதிகமானவர்கள் வழக்குத் தொடுக்க பின்வாங்குகின்றனர்.
அதனால் அனைத்தையும் ஒரு கூரையின் கீழ் டிஜிற்றல் மயப்படுத்துவதே எமது நோக்கமாகும். இந்த வேலைத்திட்டத்துக்காக அரசாங்கம் நிதி ஒதுக்குவதற்கு இணக்கம்தெரிவித்துள்ளது. இந்தக் காலாண்டில் குறைந்தபட்சம் 50 அல்லது 60 நீதிமன்றங்களை டிஜிற்றல் மயப்படுத்துவதுடன், ஏனைய நீதிமன்றங்களை அடுத்தவருடம் டிஜிற்றல் மயப்படுத்துவோம்- என்றார். (எ-இ)

# நெடுஞ்சாலைகளுக்கு பாதுகாப்புக் கமராக்கள்

கொழும்பு,ஒக்.30
அரசாங்கத்தின் உத்தரவுக்கமைவாக, நாடு முழுவதுமுள்ள அனைத்து நெடுஞ்சாலைகளுக்கும், அடுத்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம், பாதுகாப்புக் கமராக்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. முதற்கட்டமாக மேற்கு, வடமேற்கு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப்படும். பின்னர் ஏனைய மாகாண நெடுஞ்சாலைகளிலும் பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப்படும். இதற்கான பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (க-இ)

# வலிகாமம் மேற்கில் இன்று மின்தடை!



யாழ்ப்பாணம், ஒக். 30
மின்மாற்றிகளில் இடம்பெறும் திருத்தம் மற்றும் பராமரிப்புப் பணிகள் காரணமாக வலிகாமம் மேற்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று மின்தடை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி, வட்டு வடக்கு மற்றும் வட்டு மேற்கு, சங்கரத்தை, சித்தங்கேணி, துணவியின் ஒரு பகுதி, அராலி வடக்கின் ஒரு பகுதி ஆகிய பகுதிகளிலேயே இன்று காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-66)

# இலங்கையின் பொருளாதாரத்தில் அடுத்தாண்டு 3.1 வீத வளர்ச்சி

கொழும்பு, ஒக்.30
அடுத்த ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் 3.1 வீதம்வரை வளர்ச்சியடைய முடியும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.
ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்ட, சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் தோமஸ் ஹெல்ப்லின் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.
சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக இலங்கை அரசாங்கம் சீர்திருத்த வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்த பின்னணியில், பொருளாதார வளர்ச்சியில் வலுவான மீட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வளர்ச்சி 5 வீதமாகக் காணப்பட்ட அதேவேளை, இந்த ஆண்டின் முதல் பாதியில் வளர்ச்சி 4.8 வீதமாக இருந்தது.
தற்போது அந்த வலுவான மீட்சியிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு சாதாரண நிலைக்குத் திரும்புதல் மாத்திரமே நிகழ்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.